தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 130 அடியை எட்டியது



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை மாலை 130 அடியை எட்டியதால், இம்மாதமே அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிவிடும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி 129.80 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 3,500 கன அடியாகவும், அணையிலிருந்து தமிழகத்துக்கு வெளியேற்றப்பட்ட நீர் நொடிக்கு 500 கன அடியாகவும் இருந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 4,568 மில்லியன் கன அடியாக இருந்தது. அதேபோல், 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 51.74 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 201 கன அடியாகவும், அணையிலிருந்து நொடிக்கு 60 கன அடி நீர் மதுரை குடிநீருக்காக வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் மொத்த நீர் இருப்பு 2,227 மில்லியன் கன அடியாக உள்ளது. கடந்த ஆண்டு, இதே நாளில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 126.60 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து 392 கன அடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் 1,387 கன அடியாகவும் இருந்தது. கடந்த ஆண்டைவிட,

முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகமாகவும், அணையின் நீர்மட்டம் உயர்ந்தும் உள்ளது. அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், செப்டம்பர் மாத இறுதிக்குள் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிவிடும் என்றும், உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைக்கு கொண்டுவரும் நாளினை எதிர்பார்த்து மகிழ்ச்சியுடன் காத்திருப்பதாகவும், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஊமப்பாளையத்தில் கோமாரி தடுப்பூசி முகாம்

மேட்டுப்பாளையம், மேட்டுப்பாளையத்தை அடுத்த ஓடந்துறை ஊராட்சி, ஊமப்பாளையம் கிராமத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ஊமப்பாளையம் மகளிர் சுயஉதவிக் குழு தொழிற்கூட வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமிற்கு, ஊராட்சித் தலைவர் லிங்கம்மாள் சண்முகம் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் பழனிசாமி, ஊராட்சி முன்னாள் தலைவர் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேட்டுப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினர்ஓ.கே.சின்னராஜ் பங்கேற்று தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். இதில் ஓடந்துறை, ராமசாமி நகர், வினோபாஜி நகர் உள்பட ஊராட்சிப் பகுதிகளை சேர்ந்த 170 கால்நடைகளுக்கு இலவச கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. முன்னாள் பேரூராட்சித் தலைவர் ராஜகோபால், கால்நடை மருத்துவர் ரங்கசாமி, உதவி மருத்துவர் சுலோச்சனா உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் இதில் பங்கேற்றனர். தொடர்ந்து, ஊராட்சிப் பகுதியில் வரும் 21-ஆம் தேதி வரை இம்முகாம் நடைபெற உள்ளது.

## பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க மானியம்

விருதுநகர், விருதுநகர் மாவட்டத்தில் வேளாண்மை அபிவிருத்தி திட்டம் சார்பில் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தெரிவித்துள்ளார். இது குறித்து ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இம்மாவட்ட மீன் வளத்துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் சார்பில் மீன்

வளர்ப்பு தொழிலை ஊக்கப்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால் அனைத்து நீர்ப்பாசன குளங்கள் வறண்டும், முக்கியமான நீர்த்தேக்கங்களிலும் குறைந்த அளவு நீர் ஆதாரம் போன்றவைகளால் மீன் உற்பத்தி குறைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மீன் உற்பத்தியினை பெருக்கும் வகையில் மீன்வளத்துறை சார்பில் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பை மேற்கொள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்த மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 900 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படும் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள ரூ.35 ஆயிரம் மதிப்பிலான மீன் குஞ்சுகள் மற்றும் தீவனம் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. எனவே மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு நல்ல நீர் ஆதாரத்துடன் நிலம் இருந்தால் நேரிடையாக உரிய ஆவணங்களுடன் மீன் வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதோடு, பண்ணைக்குட்டை அமையவுள்ள இடத்தின் மண்வகை, நீரினை நிலை நிறுத்தும் வகையில் இருப்பதுடன் அதிகமான களிமண் இருத்தல் என்பது அவசியம் ஆகும். எனவே விண்ணப்பதாரரின் இடம் தொழில் நுட்ப அடிப்படையில் மீன் வளர்ப்புக்கு ஏற்ற இடமா என்பது குறித்து மீன் வளர்ப்பு உதவி துறை இயக்குநரால் ஆய்வு செய்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். இது போன்று தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு மீன் வளர்ப்பு பற்றிய பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படும். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களது நிலத்தில் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்நோக்கு பண்ணைக்குட்டைகள் அமைத்து மீன் வளர்ப்பு மூலம் வருவாயை உயர்த்திக் கொள்ளலாம் என ஆட்சியர் விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலை உயர்வு</u>

பல்லடம், தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர்

கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. திங்கள்கிழமை, பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 74-ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.76-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.90, சென்னையில் ரூ. 3.25.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.26 அடி

**ஈரோடு,** பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 74.26 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 7,218 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,500 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 12.8 டி.எம்.சி.

மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு...

**உதகை,** நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்கள் விளை நிலங்களிலுள்ள மண்ணை பரிசோதனை செய்து விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டுமென, தோட்டக்கலைத் துறை கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக, நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தெரிவித்துள்ளதாவது: நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் பகுதிகளில் தற்போது கடைபோக பயிர்கள் சாகுபடி செய்ய நிலம் தயார் செய்யும் பணி பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழக முதல்வரின் கனவுத் திட்டமான பயிர்களில் இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் ஆகியவற்றை பூர்த்தி செய்யும் வகையில் உழவர்கள் அனைவரும் அவரவர் பகுதிகளிலுள்ள உதவி வேளாண்மை அலுவலர் அல்லது தோட்டக்கலை அலுவலரை அணுகி மண் மாதிரிகளைச் சேகரித்து, உதகையில் செயல்படும் மண் ஆய்வுக்கூடத்திற்கு அளித்து மண் மாதிரியை ஆய்வு செய்து, ஆய்வுப் பரிந்துரைகளின் படி உரமிட்டு பயனடைய வேண்டுமெனவும்

தெரிவித்துள்ளார்.

**"5.30 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் இலவசத் தடுப்பூசி'**

வேலூர், வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் 7-வது சுற்று கோமாரி நோய் இலவச தடுப்பூசி முகாமில் 5.30 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது என்று கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் டி.ஆபிரகாம் கூறினார். காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம், கரிவேடு ஊராட்சியில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பிலான கோமாரி நோய் இலவச தடுப்பூசி முகாமை அவர் தொடங்கி வைத்துப் பேசியது:

விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதாக கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் அமைந்துள்ளது. அதை முற்றிலும் தமிழகத்தில் இருந்து அகற்றுவதற்காக 7-வது சுற்று தடுப்பூசி முகாம் திங்கள்கிழமை தொடங்கியுள்ளது. இந்த முகாம் வரும் 21-ம் தேதி வரை நடைபெறும். இதில் 5.30 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. தற்போது தமிழகத்தில் அண்டை மாநிலங்களைக் காட்டிலும் இந்நோய் கட்டுப்பாட்டுக்கு வந்துள்ளது என்றார். தீவன அபிவிருத்தி பயிர் பண்ணை: அதைத் தொடர்ந்து நெமிலி ஊராட்சி ஒன்றியம், கீழ்வீதி ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேலூர் மாவட்ட நிர்வாகம் இணைந்து 86 ஏக்கர் பரப்பளவில் அமைக்கவுள்ள கால்நடை தீவன அபிவிருத்தி பயிர் பண்ணைக்கான இடத்தை பார்வையிட்ட அவர் கூறியது: இப்பண்ணையில் 50 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனப் பயிர்களும், 36 ஏக்கர் பரப்பில் மரத்தீவனம் பயிரிடப்பட்டு இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும். இப்பண்ணை மூலம் ஆண்டுக்கு 6 ஆயிரம் மெட்ரிக் டன் பசுந்தீவன பயிர்கள் உற்பத்தி செய்யப்படும். இப்பண்ணையை 5 ஆண்டுகள் வரை கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து பராமரிக்கவுள்ளன. அதைத் தொடர்ந்து இப்பண்ணை கீழ்வீதி ஊராட்சி மன்றத்தில் பொறுப்பில் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டம் 3 மாதத்துக்குள் செயல்பாட்டுக்கு வரும் என்றார். ஆய்வின்போது ஆட்சியர் இரா.நந்தகோபால், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கத் துறை இயக்குநர் டாக்டர் சந்திரஹாசன், ராணிப்பேட்டை கோட்டாட்சியர் பிரியதர்ஷினி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் கமலநாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திருவண்ணாமலையில் வேளாண் கல்லூரி முதல்வர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் பாராட்டு

திருவண்ணாமலை, திருவண்ணாமலை அருகே அரசு வேளாண் கல்லூரி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என்று அறிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். திருவண்ணாமலை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 2) நடைபெற்றது. திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு, கோட்டாட்சியர் முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார். வட்டாட்சியர் வேடியப்பன் மற்றும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், வட்ட அளவிலான குறைதீர் கூட்டங்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வருவதே இல்லை. கீழ்மட்டத்தில் உள்ள அலுவலர்கள் மட்டுமே வருகின்றனர். இனிவரும் கூட்டங்களிலாவது வட்டார வளர்ச்சி அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்ய வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு பல கோடியை ரூபாய் பாக்கி வைத்துள்ளன. இதைப் பெற்றுத் தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சில ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபைக் கூட்டங்களை நடத்தாமலேயே, நடத்தியதுபோல கணக்குக் காட்டுகின்றனர். இதை அரசு கடுமையாக கண்காணிக்க வேண்டும். திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சி சார்பில் வைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டியில் தண்ணீர் இருப்பதில்லை. இதனால் பயணிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

எனவே, தண்ணீர் தொட்டியில் அடிக்கடி தண்ணீர் நிரப்பி பயணிகளுக்கு குடிநீர் வழங்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்துப் பேசிய கோட்டாட்சியர் முத்துக்குமாரசாமி, விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். முதல்வருக்குப் பாராட்டு: தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கம், ஒருங்கிணைந்த விவசாயிகள் உரிமை மீட்பு சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த நிர்வாகிகள், "விவசாயிகள் பலர் திருவண்ணாமலையை அடுத்த வாழவச்சனூரில் அரசு சார்பில் வேளாண் கல்லூரி அமைக்கப்படும். திருவண்ணாமலையை அடுத்த நாயுடுமங்கலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என்று தமிழக சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதைப் பாராட்டி இனிப்பு வழங்குகிறோம்' என்று கூறி குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

## திருவாரூர்: 2 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி

திருவாரூர், திருவாரூர் மாவட்டத்தில் 2 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படவுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன். கொரடாச்சேரி அருகே பெரும்புகளூர் கிராமத்தில் திங்கள்கிழமை 7-வது சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணியைத் தொடக்கி வைத்து மேலும் அவர் பேசியது: மாவட்டம் முழுவதும் திங்கள்கிழமை முதல் வரும் 21-ம் தேதி வரை 43 மருத்துவக் குழுக்கள் மூலம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்படுகிறது. விவசாயிகள், தங்களது கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டுக்கொண்டு பயன்பெற வேண்டும் என்றார் ஆட்சியர். நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) எம். லூர்துசாமி, உதவி இயக்குநர் தனபாலன், மருத்துவக் குழு ஜே. ஈஸ்வரன், டி. தினேஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>நாகை மாவட்டத்தில் நாளைகோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்கள்</u>**

நாகப்பட்டினம், நாகை, மயிலாடுதுறை கோட்டப் பகுதிகளில் செப். 4-ம் தேதி கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்களை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் செப். 1-ம் தேதி தொடங்கி செப். 7-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதன்படி, நாகை மற்றும் மயிலாடுதுறை கோட்டங்களில் செப். 4-ம் தேதி கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் நடைபெறும் இடங்களின் விவரம் (ஊராட்சி ஒன்றியம்- முகாம் நடைபெறும் கிராமங்கள்): நாகை- சிக்கல், கருவேலங்கடை, செட்டிச்சேரி மற்றும் நகராட்சிப் பகுதிகள். திருமருகல்- கரம்பை, வேலங்குடி, ஆதலையூர், ஆலத்தூர், ராராந்திமங்கலம், திருச்செங்காட்டான்குடி. கீழ்வேளூர்- வடகரை, வங்காரமாவடி, கோவில்கண்ணாப்பூர், ஆந்தக்குடி, தேவூர். கீழையூர்- மீனம்பநல்லூர், மேலப்பிடாகை, வேப்பஞ்சேரி, சின்னத்தும்பூர், கருங்குடி, பெரியந்தோப்பு, திருவேலி, வடுவூர், பெரிய வடக்குவெளி. தலைஞாயிறு- வடுகூர், தென்பாதி. வேதாரண்யம்- கரியாப்பட்டினம், வண்டுவாஞ்சேரி, வேம்பதேவன்காடு, ஆதனூர், தேத்தாக்குடி (தெற்கு). மயிலாடுதுறை- மாப்படுகை, கங்கனம்புத்தூர், மயிலாடுதுறை ரூரல். குத்தாலம்- பெருஞ்சேரி, கருப்பூர், மாதிரிமங்கலம். சீர்காழி- ராதாநல்லூர், நெம்மேலி. கொள்ளிடம்- அளக்குடி, மாதானம்.

<u>"3.86 **லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**'</u>

தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் என். சுப்பையன். தஞ்சாவூர் அருகே தோழகிரிபட்டி ஊராட்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கால்நடைகளுக்கு இனப்பெருக்க மருத்துவ

பரிசோதனை, குடற்புழு நீக்க முகாமைத் தொடக்கி வைத்த அவர் மேலும் பேசியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் செப்டம்பர் 1 முதல் 21-ம் தேதி வரையிலான நாள்களில் 3.86 லட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டு, தொடர்ந்து தடுப்பூசி போடும் பணி அனைத்து கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது. இதற்காக 82 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 2011-ல் 600 கறவை பசுக்களும், 16,324 வெள்ளாடுகள் - செம்மறி ஆடுகளும், 2012-ல் 600 கறவை பசுக்களும், 26,608 வெள்ளாடுகள் - செம்மறி ஆடுகளும், 2013-14 ஆம் நிதியாண்டில் 600 கறவைப் பசுக்களும், 25,488 வெள்ளாடுகள் - செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டன. 2014-15 ஆம் ஆண்டில் இதுவரை 200 கறவைப் பசுக்களும், 12,204 வெள்ளாடுகள் - செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. கோமாரி நோய்க்கு தடுப்பூசி மட்டுமே மருந்து. இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவதுடன், சினைப் பிடிப்பதில் தாமதம் ஏற்படும். மேலும், இளைப்பு ஏற்படுவதால் எருதுகளில் வேலைத்திறன் குறைகிறது. இளங்கன்றுகளுக்கு இந்நோய் ஏற்பட்டால் 100 சதம் இறந்து விடும். எனவே, இந்நோய் வராமல் தடுப்பதற்குத் தடுப்பூசி அளிப்பதே சிறந்தது. இப்பணி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நடந்தால் மட்டுமே கோமாரி நோயை முற்றிலும் ஒழிக்க முடியும் என்றார் ஆட்சியர். முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் செல்வ விநாயகம், உதவி இயக்குநர்கள் நெடுஞ்செழியன், ரவீந்திரன், ஷெரீப், செந்தரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பருவமழை தாக்கத்தால் சாரலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்**

நாமக்கல், தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் மீண்டும் தொடங்கியுள்ளதால் நாமக்கல், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சாரலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை

வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (செப்.3 முதல் 5-ம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டதுடன், சில இடங்களில் 4 மி.மீ. வரை மழையும் பெய்யக்கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 6 கி.மீ. முதல் 8 கி.மீ. வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 77 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 55 சதம் முதல் அதிகபட்சம் 75 சதம் வரை இருக்கும். கோழிப்பண்ணையாளர் களுக்கு..: தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் பிற மாநிலங்களில் நல்ல அளவில் இருந்தாலும், தமிழகத்தின் மேல் அதன் தாக்கம் குறைவாகவே உள்ளது. இந்தப் பருவமழைக்காலம் முடிவடைவதற்கு இன்னும் 30 நாள்களே உள்ள நிலையில் மீண்டும் அதன் தாக்கம் தொடங்கியுள்ளது. இதனால், நாமக்கல், சுற்றுவட்டாரப் பகுதிகளில் சாரலுடன் கூடிய மழை காணப்படும். பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் பண்ணைக் கோழிகளுக்குச் சாதகமான அளவில் காணப்படும் என்பதால் முட்டை உற்பத்தி இயல்பாகவே இருக்கும். தீவன மூலப்பொருள்களின் தரத்திலும், பூஞ்சான நச்சுகளின் அளவுகளிலும் மிகுந்த கவனம் கொண்டு பரிசோதனைக்குப் பிறகே பயன்படுத்த வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு..: கால்நடைகளைத் தாக்கும் முக்கியமான நோய் கோமாரி நோயாகும். இது ஆடு, மாடு என கால் குளம்புள்ள விலங்கினங்களுக்கு ஏற்படுகிறது. இந்நோய் பாதிப்பால் அதிக பொருளாதார இழப்பு ஏற்படும். இந்த நோயைத் தடுக்க ஆண்டொன்றுக்கு இரு முறை (6 மாத கால இடைவெளியில்) கோமாரி நோய்த் தடுப்பூசி போட வேண்டும். எனவே, விவசாயிகள் தங்கள் மாடுகள், கன்றுகளுக்கு தவறாமல் கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.33 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம், நாமகிரிப்பேட்டையில் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில் ரூ.33 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது. கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடந்த

ஏலத்தில் தலா 65 கிலோ கொண்ட 785 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில் விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சமாக குவிண்டால் ரூ.7,099-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,110-க்கும் ஏலம் போனது. இதேபோல் உருண்டை ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.6,456-க்கும் குறைந்த பட்சமாக ரூ.6,160-க்கும் விலை போனது. பனங்காலி ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.14,100-க்கும், குறைந்தபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.7,781-க்கும் ஏலம் போனது. இதில் ஒரே நாளில் ரூ.33 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

## குமரியில் தொடர் மழை: மாம்பழத்துறையாறு அணை நிரம்பியது

நாகர்கோவில், குமரி மாவட்டத்தில் மழை நீடித்து வருவதால் மாம்பழத்துறையாறு அணை செவ்வாய்க்கிழமை காலை நிரம்பியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. செவ்வாய்க்கிழமை நிலவரப்படி மாம்பழத்துறையாறு அணை அதன் கொள்ளளவு அளவான 54.12 அடியை எட்டியது. தொடர்ந்து அணைக்கு விநாடிக்கு 20 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த அணைப்பகுதியில் மழை பெய்து வருவதால், அணைக்கு கூடுதலாக தண்ணீர் வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. பெருஞ்சாணி அணையின் மொத்த கொள்ளளவு 77 அடி. தற்போது அணை 66.90 அடியை எட்டியுள்ளது. அணைக்கு 1,360 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாள்களில் பெருஞ்சாணி அணையும் நிரம்பும் என எதிர்பார்ப்பதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

பேச்சிப்பாறை அணை 48 அடி கொள்ளளவைக் கொண்டது. தற்போது 25.30 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 917 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் 17.8 மி.மீ. மழை பெய்துள்ளது. அணைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இருப்பினும் மழை வெள்ளம் ஆறுகளில் பெருக்கெடுத்து ஒடுகிறது. குளங்களில் உள்ள உபரி நீர் கால்வாய்களில் பாய்கிறது. மாவட்டத்தில் அதிகபட்சமாக

திருவட்டாரில் 44.3 மி.மீ, திற்பரப்பில் 25.6 மி.மீ, சுருளோட்டில் 31.6 மி.மீ மழை பதிவாகி உள்ளது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்து வரும் முக்கடல் நீர்மட்டம் பிளஸ் 15.20 அடியை எட்டியுள்ளது. இதனால் நகரில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் நீங்கியுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பயனளிக்கும் பல பயிர் பண்ணையம்</u>**



முயற்சி என்பது விதை போல, அதை விதைத்து கொண்டே இரு... முளைத்தால் மரம், இல்லையென்றால் மண்ணிற்கு உரம்" என்கிறார் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார். காய்கறி சாகுபடி, நெல் சாகுபடி, எள் சாகுபடி, கடலை சாகுபடியில், அசத்தி வருகின்றனர், சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை பனம்பட்டியை சேர்ந்த விவசாயிகள். காரைக்குடியிலிருந்து 20 கி.மீ., தொலைவில் உள்ளது இந்த பனம்பட்டி. 10 ஏக்கரில் பல பயிர்களை, ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து வரும் சித.உடையப்பன் கூறியதாவது: ஒரு ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளோம். மூன்று ஏக்கரில் தென்னை, அரை ஏக்கரில் கேழ்வரகு, அரை ஏக்கரில் மக்காசோளம், 20

சென்டில் மரவள்ளி கிழங்கு, தலா 30 சென்டில் கத்தரி, வெண்டை, கீரை, மிளகாய் பயிரிட்டுள்ளோம். 3 ஏக்கர் கடலை பயிரிட்டுள்ளோம். 30 நாளில் பலனை தருவது கொத்தவரங்காய், தட்டைபயிறு, 60 நாளில் பலன் தருவது கத்தரி, 45 நாளில் பலன் தருவது மிளகாய், 120 நாளில் பலன் தருவது கேழ்வரகு, 90 நாளில் பலன் தருவது கடலை, 9 மாதத்தில் பலன் தருவது வாழை. இவை அனைத்தையும் இங்கு பயிரிட்டுள்ளோம். கடலை, நெல், தென்னை, வாழை மட்டுமே மொத்தமாக அறுவடை செய்யப்படுகிறது. காய்கறிகள் அன்றாடமும், வாரத்துக்கு ஒரு முறையும் அறுவடை செய்து வருகிறோம். தினமும் பறிக்கும் காய்கறிகள் மூலம் ரூ.300 முதல் 500-ம், வாரத்துக்கு ஒரு முறை சந்தைக்கு செல்லும் காய்கறி மூலம் ரூ.5 ஆயிரமும் வருமானம் கிடைக்கிறது. வெளியே வேலைக்கு சென்றால், ரூ.300 வருமானமாக கிடைக்கும். அதே நம் நிலத்தில் வேலை செய்தால் ரூ.500 தினந்தோறும் வருமானமாக கிடைக்கும். நானும், என்னுடைய அண்ணன் விஸ்வலிங்கமும், வீட்டு உறுப்பினர்களும் தான் உழைத்து வருகிறோம். 30 சென்ட் கத்தரி மூலம், ரூ.40 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். செலவு போக ரூ.25 ஆயிரம் வருமானமாக கிடைக்கும். நோய் தாக்கம் தான் கத்தரியின் வீழ்ச்சிக்கு காரணம். நோய் தாக்காதவாறு ஒவ்வொரு நாளும் இதை கண்காணிக்க வேண்டும். கொத்தவரங்காய்க்கு உரம், மருந்து அதிகம் தேவைப்படாது. தொழு உரம் மட்டும் இட்டால் போதும். ஒரே பயிரை பயிரிட்டு, அதை மட்டுமே நம்பியிருக்காமல், இருக்கின்ற நிலத்தை பல பிரிவாக பிரித்து, பல வகை பண்ணையம் மேற்கொண்டால், பலன் எதிர்பார்த்ததை விட அதிகமாக கிடைக்கும். வீட்டு தேவையும், இதன் மூலம் நிறைவேற்றி கொள்ளலாம், என்றார். கடன்படா வேளாண்மைக்கு கலப்பு சாகுபடி செய்து அசத்தி வரும் இவரை போல், இல்லாவிட்டாலும், இருக்கின்ற இடத்தில், இயன்றவரை தோட்டக்கலை பயிர்களை விவசாயம் செய்து, நம் தேவையை நாம் பூர்த்தி செய்து கொள்ள முன்வர வேண்டும். ஆலோசிக்க : 94420 43575

டி.செந்தில்குமார், காரைக்குடி

# <u>சின்ன சின்ன செய்திகள்</u>





**எலி மேலாண்மை** : நெல்நடவு வயலில் ஒருங்கிணைந்த எலி மேலாண்மையில் 15 சக குருத்துகள் அல்லது 2 சக சிம்புகள் சேதமடைந்திருந்தால் எலி கட்டுப்பாடு முறைகளை கடைப்பிடிக்க தொடங்க வேண்டும். மேலும் அதில் உருவாகும் முன் வயல்வரப்புகளில் காணப்படுகின்ற எலி வளைகளைத் தோண்டி எலிகளை கொல்ல வேண்டும். வயலில் வரப்புகளை முடிந்த அளவுக்கு குறுகியதாக அமைத்துக் கொள்ளுதல் அவசியம். எலிகள் மறைந்து தங்கி வாழ்வதற்கு உகந்ததாக இருக்கும். வைக்கோல் போர்களை முடிந்தவரை வயல்களுக்கு அருகில் வைக்காமலிருப்பது மிகவும் நல்லது. வயல்களிலும், வரப்புகளிலும் காணப்படுகின்ற வளைகளையும் முள் செடிகளையும் அப்புறப்படுத்த வேண்டும். ஏ.டி.டி.37 மற்றும் டி.கே.எம்.9 இரகங்களை எலிகள் விரும்புவதில்லை. சேதம் அதிகமுள்ள இடங்களில் இந்த இரகங்களை பயன்படுத்துவதன் மூலம் எலியின் சேதத்தை தவிர்க்கலாம். கதிர் வெளிவரும் தருணத்தில் எலிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் சூழ்நிலையில் "தஞ்சாவூர் எலிக்கிட்டிகளை ஏக்கருக்கு 20 என்ற அளவில் வரப்பிலிருந்து 3மீ இடைவெளியில் கிட்டிக்கு கிட்டி 5 மீ இடைவெளி விட்டு வைத்தல் வேண்டும். பொரியுடன் சிறிதளவு வறுத்த எள் பொடியையும் கலந்தால் எலிகள் அதிக அளவில் கிட்டியில் விழும். பானைவழி புகை மூட்டம் இடுவதால் எலிகள் அதன் குஞ்சுகளுடன் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உடனடியாக (3 முதல் 5 நிமிடங்களில்) இறக்கின்றன. எலிகள் மேலும் அதிக அளவில் காணப்படும் போது ஜிங்க்பாஸ்பைடு நச்சு மருந்தினைப் பயன்படுத்த வேண்டும். எஞ்சியுள்ள எலிகளைக் கட்டுப்படுத்த வார்ப்பரின்

பயன்படுத்தலாம். எலியினுடைய சேதமே காணப்படாத வரையில் நச்சுணவைத் தொடர்ந்து வைப்பது அவசியம். எலிகளுக்கு நச்சுணவை வைத்துக் கொண்டிருக்கும் அதே நாட்களில் எலி வளைகளில் அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகளையும் இட்டு நச்சுப்புகை யூட்டி எலிகளைக் கட்டுப்படுத்தலாம். வயல்களிலும், வரப்புகளிலும் T வடிவக் குச்சிகளை நட்டு வைத்தால் ஆந்தை போன்ற பறவைகளை இரவு நேரங்களில் கவாந்து அவற்றின் மூலம் எலிகளைக் கொல்லலாம். கோடை மாதங்களில் வயல்களில் உணவுப்பொருட்களே இல்லாத சூழ்நிலையில் எலிகள் நச்சுணவை எளிதில் உண்ணுகின்ற பக்குவத்தில் இருக்கும். ஆகவே முன்னர் கூறிய முறையில் கூட்டு முயற்சியோடு நச்சுணவு வைத்து எலிகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். மேற்கூறிய கட்டுப்பாட்டு முறைகளைத் தனித்தனியாக மேற்கொள்ளாமல் ஒருங்கிணைந்த வகையில் ஒரு கிராமத் திலுள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றுபட்டு ஒற்றுமையான முறையில் சமுதாய நோக்குடன் கடைபிடித்தால் எலிகளைக் கணிசமாகக் கட்டுப்படுத்தலாம். நெல் வளர்ப்பு 09006 (சீரகசம்பா) : வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை. இந்த புதியவார்ப்பு எல்லா பருவத்திற்கும் ஏற்றது. வயது 125 - 130 நாட்கள். எக்டருக்கு 6000 கிலோ தானிய மகசூல் கொடுக்கவல்லது. இதன் உருவாக்கம் ஏ.டி.டி. 43/ சீரகசம்பாவின் இனக்கலப்பு மூலம். **சிறப்பியல்புகள் :** நாட்டு சீரகசம்பாவை விட சன்னரகம், இரண்டு மடங்கு மகசூல் அதிகம். குறைவான விதைநெல் (ஏக்கருக்கு 1 கிலோ) போதும். குறைவான நீர் தேவை. வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தன்மை, SRI முறை நடவுக்கு ஏற்றது. அதிக தூர்கட்டும் தன்மை அதிக நோய் மற்றும் பூச்சி எதிர்ப்புத்தன்மை, குறைந்த உயரம் (90செ.மீ), சாயாத தன்மை, பிரியாணி, குஸ்கா, தக்காளி சாதம், தேங்காய் சாதம், புளியோதரை, எலுமிச்ச சாதம், சர்க்கரைப்பொங்கல், வெண்பொங்கல் செய்வதற்கு ஏற்ற இரகம். முன்னோடி விவசாயிகளின் பண்ணைத்திடல் - எஸ்.சிவசாமி, காரியாபட்டி (90038 48444), கே.பாண்டியன், ஜெயமங்கலம் (9150250135).
- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**<u>தென்னையில் ஒல்லிக்காய்கள்!</u>**



தென்னையில் சராசரியாக மூன்று முதல் பத்து சதவீதம் வரை, ஒல்லிக்காய்கள் ஏற்படுகின்றன. சிறுத்தும், நீளமாகவும் உள்ளே பருப்பற்றும் கொட்டாங்குச்சி அல்லது உரிமட்டையுடன் காணப்படும். இதை வைப்பாளை, தேரைக்காய் என்கின்றனர். பாரம்பரிய குணம், ஊட்டச்சத்து பற்றாக்குறை, மகரந்தச் சேர்க்கை குறைபாடு ஆகியவை காரணங்களாக கூறப்படுகின்றன. சரிவர பராமரிக்காத தோப்பு, மானாவாரி தோப்பிலும் ஒல்லிக்காய்கள் அதிகமாக இருக்கும். பாரம்பரிய ஒல்லிக்காய் ஏற்படுவதைத் தவிர்க்க, தரமான 15 முதல் 45 வயதுடைய தாய் மரமாக, 35 மட்டைகளுக்கு குறைவில்லாததும், ஆண்டுக்கு 100 காய்கள் கொடுக்கவல்லதும், பூச்சி நோய் தாக்குதல் இல்லாத மரங்களில் இருந்து, ஓராண்டு முதிர்ச்சி அடைந்த தென்னை நெற்றுக்களை தேர்வு செய்து, நாற்றுகளைத் தயார் செய்ய வேண்டும். நாற்றுகளின் வயது 9 முதல் 12 மாதம், அதிக வேர்களை உடைய கன்றுகள், கன்றுகளின் கழுத்துப்பகுதி 13 செ.மீ., தடிமன், ஐந்து முதல் ஏழு இலைகளுடன், பூச்சி, நோய் தாக்காதவையாக இருக்க வேண்டும். நன்கு வளர்ந்த மரம் ஆண்டுக்கு 540 கிராம் தழைச்சத்து, 260 கிராம் மணிச்சத்து, 820 கிராம் சாம்பல் சத்துக்களை, மண்ணிலிருந்து எடுத்துக் கொள்கிறது. இதனை ரசாயன மற்றும் இயற்கை உரங்கள் மூலம் ஈடுகட்ட வேண்டும். இவை தவிர சோடியம், கால்சியம், மக்னீசியம், கந்தகம், துத்தநாகம், இரும்பு, தாமிரம், போரான் ஊட்டச்சத்துகளும் தென்னை

உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதை சரிசெய்வதற்கு தென்னைக்கான நுண்ணூட்டக் கல்வைகளை, தென்னைக்கு ஒருகிலோ என்ற அளவில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இடவேண்டும். இயற்கை எருவாக மட்கிய சாணம், கம்போஸ்ட், கோழி எரு, மட்கிய இலை மற்றும் தென்னை நார்க்கழிவுகளை இடலாம். பசுந்தாள் உரங்களான சணப்பு, கொளுஞ்சி, கலப்பகோனியம் போன்றவற்றை தென்னையின் ஊடே விதைத்து, பூக்கும் பருவத்தில் மடக்கி உழவேண்டும். இதனால் ஒல்லிக்காய்களின் எண்ணிக்கை குறையும். தேங்காயின் பருப்பு உற்பத்திக்கும், அதன் வளர்ச்சிக்கும் சாம்பல் சத்தும், போரான் சத்தும் தேவைப்படுகின்றன. சத்து பற்றாக்குறையால் காய்களில் வெடிப்பு ஏற்பட்டு, பருப்பு வளர்ச்சி தடைபடுகிறது. இதற்கு, மட்கிய சாண எரு அல்லது பசுந்தாள் உரம் 50 கிலோ, யூரியா 1.3கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 2 கிலோ, கூடுதல் பொட்டாஷ் ஒரு கிலோ, போரானை வெண்காரம் 200 கிராம் ஆகியவற்றை, மூன்றாண்டு களுக்கு ஒருமுறை இடவேண்டும். இதன்மூலம் ஒல்லிக்காய்கள் உற்பத்தி குறையும்.கொ.பாலகிருஷ்ணன், விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறைத் தலைவர், விவசாயக் கல்லூரி, மதுரை.

## அனைத்து நதிகளை இணைக்க திட்டம்: அமைச்சர்

**பெங்களூரு:** தேசிய அளவில் நதிகளை இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய ரசாயணத்துறை அமைச்சர் அனந்தகுமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: தேசிய அளவில் அனைத்து நதிகளையும் இணைக்கும் திட்டம் மத்திய அரசின் கொள்கையாக உள்து. இது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்படும். குழு அளிக்கும் அறிக்கையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . முதற்கட்டமாக ம.பி மாநிலத்தில் கிருஷ்ணா-நர்மதா நதிகளை இணைப்பதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சிந்து ,கங்கா, யமுனா,கோதாவரி நதிகளை இணைப்பதன் மூலம் கூடுதலாக 8 கோடி ஏக்கருக்கு பாசன வசதி பெற முடியும். 50 ஆயிரம் மெகாவாட் மின்சாரம்

கூடுதலாக பெறமுடியும். இத்தகைய திட்டத்தை செயல்படுத்தி தீருவது என மத்திய முடிவு செய்திருப்பதாக தெரிவித்தார்.

## மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்** : மேட்டூர் அணையின் நீர்வரத்து 6,125 கனஅடியில் இருந்து 13,037 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 103.04 அடியாக உள்ளது. அணையின் நீர்இருப்பு 68.83 டி.எம்.சி.,யாக உள்ளது. இதனால் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர் வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாக அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவும் 17,800 கனஅடியில் இருந்து 18,900 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. டெல்டா பாசனத்திற்காக 18 ஆயிரம் கனஅடியும், கால்வாய் பாசனத்திற்காக 900 கனஅடி நீரும் திறக்கப்பட்டுள்ளது.

## செப்.5ம் தேதி வைகை அணை திறப்பு

**சென்னை**: மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக வைகை அணை வரும் 5ம் தேதி திறக்கப்படுகிறது. இதன் காரணமாக இந்த மாவட்டங்களில் 45,041 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். முதல்வர் ஜெயலலிதா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**பனமரத்துப்பட்டி**; பனமரத்துப்பட்டியில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம், வரும், 9ம் தேதி வரை நடக்கிறது. பனமரத்துப்பட்டி டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒன்பது கிராமங்களில், நேற்று முன்தினம் (செப்.,1) முதல், 9ம் தேதி வரை, இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. பனமரத்துப்பட்டி, காந்திநகர் பகுதி கால்நடைகளுக்கு கால்நடை மருந்தகத்திலும், 2ம் தேதி, 13வது வார்டு கோம்பைக்காடு ஒண்டிக்கடையிலும், 3ம் தேதி, பூமØ லகரடு, முத்துகாலனி, அடிக்கரை, லச்சுகாடு ஆகிய இடங்களிலும், கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. செப்., 4ம் தேதி அடிக்கரை ஏரி பங்களா, 5ம் தேதி காளியாக்கோவில்புதூர் காளியம்மன்கோவில் அருகில், 6ம் தேதி நல்லியாம்புதூர் மாரியம்மன் கோவில் அருகில், 8ம் தேதி ஆத்துமேடு பஸ் ஸ்டாப் அருகில், 9ம் தேதி

தண்ணீர் தொட்டி பஸ் ஸ்டாப் அருகில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. காலை, 7 மணி முதல், 10 மணி வரை நடக்கும் முகாமில், விவசாயிகள் தவறாமல், கால்நடைகளை அழைத்து வந்து, கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என, கால்நடைத்துறை மருத்துவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கால்நடை முகாம்

**அவலூர்பேட்டை**: மேல்மலையனூர் ஒன்றியம் வடுகப்பூண்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சரவணன் முகாமை துவக்கிவைத்தார். துணை தலைவர் லட்சுமி முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் சத்தியமூர்த்தி வரவேற்றார். டாக்டர் துரைமுருகன் தலைமையில் உதவியாளர்கள் விஜயகுமார், தட்சணாமூர்த்தி, முகமது நியாசுதீன் ஆகியோர் 342 மாடுகளுக்கு தடுப்பூசி அளித்து சிகிச்சை மேற்கொண்டனர்.

## 450 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி வழங்கல்

**மோகனூர்**: பேட்டப்பாளையம் பஞ்சாயத்தில் நடந்த, கோமாரி நோய் தடுப்பூசி வழங்கும் முகாமில், 450க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில், ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி வழங்கும் முகாம், நேற்று முன்தினம் துவங்கியது. செப்டம்பர், 21ம் தேதி வரை நடக்கும் இம்முகாம், மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்து, நகராட்சி உள்ளிட்ட பகுதிகளில் நடக்கிறது. மோகனூர் யூனியன், பேட்டப்பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட, கருப்பணார்கோவில், பேட்டப்பாளையம் மாரியம்மன் கோவில், கிராயூர், பனமரத்துப்பட்டி, மணியங்காளிப்பட்டி, பனங்காடு, சென்னாங்கல்புதூர் மற்றும் பஞ்சாயத்து அலுவலகம் ஆகிய, எட்டு இடங்களில் முகாம் நடந்தது. பஞ்சாயத்து அலுவலகம் முன் நடந்த முகாமை, டாக்டர் கோவிந்தராஜ் துவக்கி வைத்தார். இம்முகாமில், 450க்கும் மேற்பட்ட

மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. டாக்டர்கள் நடராஜன், மாரிமுத்து, மாணிக்கவாசகம், பிரபாவதி, கால்நடை ஆய்வாளர்கள் பரமேஸ்வரி, புனிதா, உதவியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம் ரூ. 33 லட்சத்துக்கு விற்பனை

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 33 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 785 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிகபட்சம், 7,099 ரூபாய், குறைந்தபட்சம், 6,110 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிகபட்சம் 6,456க்கும், குறைந்த பட்சம், 6,160 ரூபாய்க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 14,100க்கும், குறைந்த பட்சம், 7,781 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 33 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## கால்நடை வளர்ப்போருக்கு தர்மபுரி கலெக்டர் அழைப்பு

**தர்மபுரி:** "மாடுகள், எருதுகளுக்கு நோய் வராமல் தடுக்க, சிறப்பு முகாமில் பங்கேற்று, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியை போட்டுக் கொள்ள வேண்டும்' என, தர்மபுரி கலெக்டர் விவேகானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தர்மபுரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம், 1ம் தேதி துவங்கியது. வரும், 21ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பஞ்சாயத்துக்களிலும் முகாம் நடக்கிறது. நல்லம்பள்ளி யூனியன், பாளையம்புதூரில் நடந்த முகாமை, கலெக்டர் விவேகானந்தன் துவக்கி வைத்து பேசியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 59 ஆயிரத்து, 62 மாடுகள் உள்ளன. இவைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க, தடுப்பூசி மருந்துகள் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக பல்வேறு மருத்துவ

குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கோமாரி நோய் மிகவும் கொடியது. இந்நோய், மழைக்காலங்களில் வேகமாக பரவக்கூடியதும், பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடியதும் ஆகும். கோமாரி நோய் தாக்கிய பசு மாடுகளில் பால் உற்பத்தியும், எருதுகளில் வேலை திறனும் குறைந்து விடும். சிகிச்சைக்கு பின், நோயில் இருந்து குணமான மாடுகளில் வெப்பம் தாளாமை, மலட்டு தன்மை போன்ற நோய்கள் ஏற்படும். நோய் எதிர்ப்புத்திறன் குறைவாக உள்ள மாடுகள் இறக்கும் அபாயம் உள்ளது. நோய் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளின் பாலை, பருகும் கன்றுக்குட்டிகளும் இறக்கும் அபாயம் உள்ளது. இத்தகைய கொடிய நோய், பல்வேறு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. எனவே, கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க, தாங்கள் வளர்க்கும் அனைத்து பசுக்கள், காளைகள், எருமைகள் மற்றும் நான்கு மாதத்துக்கு மேற்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முகாமில், 503 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெகநாதன், உதவி இயக்குனர் இளங்கோவன், பாளையம்புதூர் கால்நடை மருந்தக உதவி டாக்டர் ஞானசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## சாமந்தி பூக்கள் சாகுபடி வீழ்ச்சி: செண்டுமல்லிக்கு கடும் கிராக்கி

**ஓசூர்**: ஓசூரில், சாமந்தி பூ சாகுபடி வீழ்ச்சி அடைந்துள்ளதால், செண்டு மல்லிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், கடந்தாண்டு, 500 ஹெக்டர் பரப்பளவில், செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டது. ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை விற்பனையை எதிர்நோக்கி சாகுபடி செய்யப்பட்ட செண்டுமல்லியை, ஒரு கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இந்நிலையில், இந்தாண்டு, 200 ஹெக்டர் பரப்பளவில், செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடும் வறட்சி காரணமாக பரப்பளவு குறைந்த போதும், கடந்தாண்டை காட்டிலும், செண்டுமல்லிக்கு போதிய விலை கிடைத்து

வருகிறது. இந்தாண்டு, விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, ஒரு கிலோ செண்டுமல்லி, 40 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது உள்ள நிலையில், ஒரு கிலோ, 25 முதல் 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், செண்டுமல்லி பரப்பளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மூன்று மாதங்களில், 200 ஹெக்டர் அளவுக்கு, செண்டுமல்லி பரப்பளவு அதிகரிக்கும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:

ஓசூர் பகுதியில், ஒரு ஏக்கர் பரப்பளவில் செண்டுமல்லி சாகுபடி செய்ய, இரண்டு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. ஒரு ஏக்கரில், 6,000 கிலோ வரை செண்டுமல்லி சாகுபடி செய்யலாம். இதற்கு, தோட்டக்கலைத்துறை சார்பில், நாற்றுக்கு மட்டும், 12 ஆயிரம் ரூபாய் மானியம் தருகின்றனர். ஒரு ஏக்கர் பரப்பளவில், சொட்டு நீர் பாசனம் அமைக்க, 43 ஆயிரம் ரூபாயும், ஒரு ஹெக்டருக்கு, 96 ஆயிரம் ரூபாயும் வழங்குகின்றனர். இந்தாண்டு செண்டுமல்லிக்கு போதிய விலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். ஓசூரில் இருந்து மும்பைக்கு அதிகளவு செண்டுமல்லி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அடைமழையால் உருளை சாகுபடி பாதிப்பு

**ஊட்டி** : நீலகிரி மாவட்டத்தின் மேற்கு பகுதிகளான நஞ்சநாடு, குருத்துக்குளி, முத்தோரை, பாலாடா பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் உருளைக் கிழங்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பகுதிகளில் கடந்த 3 மாதமாக தொடர் மழை பெய்து வருவதால், உருளை கிழங்கு சாகுபடியில், விவசாயிகளுக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.ஊட்டி அருகே குருத்துக்குளியை சேர்ந்த விவசாயி மூர்த்தி கூறியதாவது: மாவட்டத்தின் மேற்கு பகுதியில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடை போக சாகுபடிக்காக விதை விதைத்து, அவை நாற்றுகளாக வளர துவங்கியுள்ளன. தொடர்ந்து பெய்து வரும் மழையால், இலை அழுகல் நோய் தாக்க துவங்கியுள்ளது. அடை மழையால், மருந்து தெளிக்கவும் முடியவில்லை. பெரிய அளவிலான நஷ்டத்தை எதிர்கொள்ள

வேண்டியிருக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது," என்றார். அதே நேரம், ஊட்டியின் கிழக்கு பகுதிகளான கெந்தொரை, தும்மனட்டி, கவரட்டி, தேனாடுகம்பை பகுதிகளில் உருளை கிழங்கு சாகுபடிக்கு ஏற்ற மழை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>தஞ்சாவூரில் 3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட ஏற்பாடு</u>**

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 86 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதென கால் நடைத்துறை முடிவு செய்துள்ளது. தஞ்சாவூர் அடுத்த தோழகிரிப்பட்டியில், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. இதை துவக்கி வைத்து, மாவட்ட கலெக்டர் சுப்பையன் பேசியதாவது:

கால்நடைகளுக்கு ஏற்படும் கொடிய நோய்களில் கோமாரி நோயும் ஒன்று. ஒருவகை வைரஸ் கிருமிகளால் பரவும் இந்த நோயை கட்டுப்படுத்தும் விதமாக, தமிழகம் முழுவதும் கால்நடைத் துறையின் சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 7வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் செப்டம்பர், 1 முதல், 21ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. இதன் மூலம், 94 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், இத்திட்டத்தில், மூன்று லட்சத்து, 86 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, மாவட்டம் முழுவதும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்களை உள்ளடக்கிய, 82 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் கிராமங்கள் தோறும் சென்று கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதை உறுதி செய்வார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் கால்நடைத் துறையின் சார்பில், விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில், கடந்த, மூன்று ஆண்டுகளில், 1,800 பயனாளிகளுக்கு கலப்பின கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதுவரை, 200 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின்

கீழ் கடந்த, மூன்று ஆண்டுகளில், 68 ஆயிரத்து, 620 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 17 ஆயிரத்து, 155 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை, 12 ஆயிரத்து, 204 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை பாதுகாக்கும் விதமாக, கால்நடைத் துறையின் சார்பில் கிராமங்கள் தோறும், அவ்வப்போது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை முற்றிலுமாக கட்டுப்படுத்தும் விதமாக, தடுப்பூசி முகாம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதில் கால்நடைத்துறையினர் மட்டுமின்றி கோமாரி நோய் தடுப்பூசி குழுவினர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபடவேண்டும். முகாமில், கால்நடைத்துறை இணை இயக்குனர் செல்வ விநாயகம், உதவி இயக்குனர்கள் நெடுஞ்செழியன், ரவீந்திரன், ஷெரீப், சௌந்தரபாண்டியன், பஞ்சாயத்து தலைவர் ராயப்பன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## அசோலாவின் பயன்கள்; மாணவிகள் விளக்கம்

**தேனி:** போடி ராசிங்காபுரம் அருகே சில்லமரத்துப்பட்டியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ், குள்ளப்புரம் விவசாயக் கல்லூரி மாணவிகள் அபிராமி, கவிநயா, சிவசங்கரி, இந்துமதி, சுஷ்மிதா, லோகப்பிரியா, ஆதிரா, திவ்யாசன்னி ஆகியோர் அசோலா வளர்ப்பு குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.அசோலாவை நீர்த் தொட்டிகளில் வளர்த்து கால்நடைகளுக்கு இடுவதால், கால்நடைகளுக்கான உணவில் புரதச்சத்து பூர்த்தியாவதோடு, பாலின் உற்பத்தி அதிகமாகிறது. மேலும் கால்நடைகள் இதனை விரும்பி உண்கின்றன. இந்த பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையின் நீர்வரத்து இருமடங்கு அதிகரிப்பு...




**மேட்டூர்**: மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 2 மடங்கு அதிகரித்து 13 ஆயிரம் கனஅடியாக உள்ளது. பாசனத்திற்காக அணையில் இருந்து 18,800 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் தற்போதைய நீர்மட்டம் 103 அடியாக உள்ளது. தண்ணீர் இருப்பு 68.83 டி.எம்.சி ஆக உள்ளது. கபினியில் இருந்து வெளியேறும் நீரின் அளவு உயர்ந்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### கர்நாடகாவில் இருந்து உபரிநீர் வெளியேற்றம்

காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் உயருகிறது.



**பென்னாகரம்:** கர்நாடக நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் கனமழையால் காவிரியில் உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன்தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கும் இன்று முதல் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. கர்நாடக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும், கேரளாவின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடகாவின் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகிறது. அணைகளின் பாதுகாப்பு கருதி, கபினியில் இருந்து நேற்று முன்தினம் (1ம்தேதி) காலை முதல் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன்படி விநாடிக்கு 25,500 கனஅடி நீர், உபரியாக வெளியேற்றப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் இருந்து வரும் காவிரியாற்று நீர் அளவை தமிழக எல்லைப்பகுதியில் உள்ள பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர் ஆணைய அலுவலகம் கணக்கிட்டு வருகிறது. இதன்படி நேற்று மாலை 5 மணி நிலவரப்படி விநாடிக்கு 12,300 கனஅடி நீர் ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல இந்த நீர்வரத்து மேலும் அதிகரித்து வருகிறது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டமும் உயரும் வாய்ப்புள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 103.37 அடியாக உள்ளது. நீர்வரத்து விநாடிக்கு 6,125 கனஅடியாகவும், நீர்திறப்பு விநாடிக்கு 17,803 கனஅடியாகவும் உள்ளது. அணையின் நீர் இருப்பு 69.27 டி.எம்.சி.யாகும். ஒகேனக்கல்லில் இருந்து மேட்டூருக்கு காவிரி உபரிநீர் வரும் பாதையின் இருபுறமும் 25கிலோ மீட்டருக்கு விவசாய நிலங்கள் உள்ளது. எனவே இங்குள்ள வாய்கால்களில் பாயும் உபரிநீரின் பெருமளவு விவசாயத்திற்கு பயன்படும். இதே போல்

ஒகேனக்கல் கூட்டுக்குடி நீர் திட்டம் மூலம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு காவிரிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்காகவும் குறிப்பிட்ட அளவில் நீர் செலவிடப்படுகிறது. இது போன்ற பயன்பாடுகளுக்கு பிறகே மேட்டூர் அணைக்கு காவிரி உபரிநீர் வந்து சேர்கிறது.

**<u>பண்டிகை கால தட்டுப்பாட்டை போக்க வெங்காய இறக்குமதி விதிகளில் தளர்வு</u>**




**புதுடெல்லி** : பண்டிகை, திருமண சீசன் தொடங்க உள்ள நிலையில் உள்நாட்டில் வெங்காய தேவை அதிகரித்துள்ளது. எனவே, வரத்தை அதிகரித்து விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், வெங்காய இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை மத்திய அரசு தளர்த்தியுள்ளது.நாட்டில் வெங்காயம், உருளைக்கிழங்கு விலை கடுமையாக உயர்ந்ததால் வியாபாரிகள் இவற்றை பதுக்கி வந்தனர். செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தி விலை உயர்த்துவதை தடுக்க மத்திய அரசு பல்வே று நடவடிக்கையை மேற்கொண்டு வந்தது. இதன் ஒரு கட்டமாக, வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு யி30 ஆயிரமாகவும், உருளை கிழங்கின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன்னுக்கு ரூ.27,000 ஆகவும் நிர்ணயித்தது. மேலும் கடந்த ஜூலை மாதம் முதல் வெங்கா யம், உருளைக்கிழங்கை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு மத்திய அரசு கொண்டு வந்தது. இந்நிலையில், பண்டிகை கால தட்டுப்பாட்டை போக்க இறக்குமதி விதிகள்

தளர்த்தப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் 3 லட்சம் டன் வெங்காயம் இறக்குமதியாகும் என தெரிகிறது.

**<u>கோதுமை ஏற்றுமதி ஊக்குவிக்கப்படுமா?</u>**




**புதுடெல்லி**: கடந்த ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் சுமார் சுமார் ரூ.2,850 கோடி மதிப்பிலான கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், நடப்பு ஆண்டின் இதே காலக்கட்டத்தில் சுமார் ரூ.2,202 கோடி கோதுமை மட்டுமே ஏற்றுமதி ஆனது. நம் நாட்டில் கோதுமை உற்பத்தி தேவையை விட அதிகம் உள்ளது. எனவே, தானியங்களுக்கு வாரியம் அமைத்து ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும் என கோதுமை வர்த்தகர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்தியாவில் ஆண்டுக்கு 9.5 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், ஏறக்குறைய 70 லட்சம் டன் மட்டுமே ஏற்றுமதியாகிறது.

## வைகை அணை 5-ந்தேதி திறப்பு ஜெயலலிதா உத்தரவு



**சென்னை**, முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து 5.9.2014 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை வட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி மற்றும் மதுரை வடக்கு வட்டங்களிலுள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## தமிழ்நாட்டில் இன்று ஓரிரு இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் தகவல்

**சென்னை,** தென் மேற்கு பருவமழை கேரளா மற்றும் கடலோர கர்நாடக பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த சில நாட்களாக

கர்நாடகாவின் பெரும்பாலான இடங்களிலும், கேரளாவின் அநேக இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், ஆங்காங்கே ஒரு சில இடங்களில் மழை பெய்தது. இதுகுறித்து சென்னை வானிலை மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:– தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், மாலை நேரங்களில் ஒரு சில பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடியோ மழையோ பெய்ய வாய்ப்பு இருக்கிறது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவுகள் வருமாறு:–

நீலகிரி மாவட்டம் தேவலாவில் 8 செ.மீ., கோவை மாவட்டம் சின்னக்கல்லார், நீலகிரி மாவட்டம் ஜி பஜார், நடுவட்டம் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ., கோவை மாவட்டம் வால்பாறை தாலுகா, வால்பாறை, தேனி மாவட்டம் பெரியார், ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில் குறிச்சிகுளத்துக்கு தண்ணீர் திறந்து விட அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உத்தரவு

கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நிலத்தடிநீர் மட்டம் உயரும் வகையில் குறிச்சி குளத்துக்கு தண்ணீர் திறந்து விட அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உத்தரவிட்டார். அதன்பேரில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது

தமிழகத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த மழைநீர் நொய்யல் ஆறு வழியாக கோவையில் உள்ள குளங்களுக்கு வந்துசேருகிறது. கடந்த ஜூலை மாதம் முதல் ஆகஸ்டு முதல் வாரம் வரை தென்மேற்கு பருவமழை விட்டு விட்டு பெய்ததால் நொய்யல் ஆற்றில் ஆடி 18 வரை நீர்வரத்து இருந்தது. இதனால் கோவையை அடுத்த உக்குளம், புதுக்குளம், கொல்ராம்பதி, நரசாம்பதி, செல்வாம்பதி, கிருஷ் ணாம்பதி, முத்தண்ணன் குளம்,

சொட்டையாண்டி குட்டை, பேரூர் பெரியகுளம், குனியமுத்தூர் குளம், கங்காநாராயணசமுத்திரம், குறிச்சிகுளம் ஆகியவற்றுக்கு தண்ணீர் வந்தது. ஆனால் அதன்பின்னர் மழை பெய்யாததால் குளங்களுக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால் கோவையை அடுத்த மதுக்கரை, சுந்தராபுரம், போத்தனூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வீடுகளில் குடிப்பதற்கு தவிர மற்ற உபயோகங்களுக்கு நீர் இல்லாததால் மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். எனவே குறிச்சிகுளம் நிரம்பினால் தான் இந்த பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

**<u>தண்ணீர் திறந்து விட உத்தரவு</u>**

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலையில் பலத்த மழை பெய்தது. இதனால் நொய்யல் ஆற்றில் நீர் பெருக்கெடுத்து குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதை தொடர்ந்து சுற்றுவட்டார பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில் குறிச்சி குளத்துக்கு தண்ணீர் திறந்து விட தமிழக நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி நேற்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன்பேரில் குறிச்சி குளத்துக்கு நேற்று மாலை முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. புட்டு விக்கி பாலத்துக்கு அருகில் உள்ள தடுப்பணையில் இருந்து குறிச்சிகுளத்துக்கு தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அந்த குளத்துக்கு 3 அடி உயரத்துக்கு தண்ணீர் வருகிறது. சுமார் 320 ஏக்கர் பரப்பளவு கொண்ட குறிச்சி குளத்துக்கு தொடர்ந்து நீர்வந்தால் நிறைய வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு திட்டம் கிட்டுசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



மொடக்குறிச்சி அருகே கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு திட்டத்தை கிட்டுசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

தடுப்பூசி முகாம்

மொடக்குறிச்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட செல்லப்பம்பாளையத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சண்முகம் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- ஈரோடு மாவட்டத்தில் 3.69 லட்சம் (எருமை மற்றும் பசு) கால்நடைகளுக்கு இன்று (நேற்று முன்தினம்) தொடங்கி 21 நாட்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளது. விடுபட்ட கால்நடைகளுக்கு 30-ந்தேதி வரை அந்தந்த கால்நடை மருந்தகங்களில் கோமாரி நோய் தடுப்பூசிபோடப்படும். தவறாமல் பயன்படுத்த வேண்டும். சினை மாடுகள், கறவை மாடுகள் மற்றும் 4 வயது முடிந்த கன்றுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசியை போடலாம். கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் நாள் குறித்த விவரம் முன்னதாகவே தெரிவிக்கப்படும். கோமாரி நோய் வருமுன் காப்பதற்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கால்நடை வளர்ப்பவர்கள் அனைவரும் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அதைத்தொடர்ந்து கோமாரி நோய் தடுப்புத்திட்டத்தினை ஆர்.என்.கிட்டுசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். முன்னதாக மாவட்ட ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி, ஆவின் இயக்குனர் அசோக், கஸ்பாபேட்டை ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சுணன், ஒன்றியக்குழு

துணைத்தலைவர் கணபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் ஜெயராமன், மொடக்குறிச்சி ஒன்றியக்குழு தலைவர் தமயந்தி, கொடுமுடி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் தமிழ்ச்செல்வி ரவி, கஸ்பாபேட்டை கூட்டுறவு சங்க தலைவர் தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் இன்று ஓரிரு இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் தகவல்



**சென்னை**, தென் மேற்கு பருவமழை கேரளா மற்றும் கடலோர கர்நாடக பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த சில நாட்களாக கர்நாடகாவின் பெரும்பாலான இடங்களிலும், கேரளாவின் அநேக இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், ஆங்காங்கே ஒரு சில இடங்களில் மழை பெய்தது. இதுகுறித்து சென்னை வானிலை மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:– தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், மாலை நேரங்களில் ஒரு சில பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடியோ மழையோ பெய்ய வாய்ப்பு இருக்கிறது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவுகள் வருமாறு:–

நீலகிரி மாவட்டம் தேவலாவில் 8 செ.மீ., கோவை மாவட்டம் சின்னக்கல்லார், நீலகிரி மாவட்டம் ஜி பஜார், நடுவட்டம் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ., கோவை மாவட்டம் வால்பாறை தாலுகா, வால்பாறை, தேனி மாவட்டம் பெரியார், ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**திருமயம் ஒன்றியத்தில் பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வைரமுத்து எம்.எல்.ஏ. வழங்கினார்**



திருமயம் ஒன்றியம் வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் மெய்யம்மை வைரவன் தலைமை தாங்கினார். விழாவில் வைரமுத்து எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வி.லெட்சுமிபுரம் ஊராட்சியை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கி பேசினார். இதேபோல் திருமயம் ஒன்றியம் ஆத்தூர், குருவிகொண்டான்பட்டி ஊராட்சிகளிலும் விலையில்லா கறவை மாடுகளை வழங்கி பேசினார். விழாவில் ஒன்றியக்குழு தலைவர் முத்துச்சாமி, துணைத்தலைவர் ராமு, கூட்டுறவு சங்க தலைவர்கள் ராமச்சந்திரன், அடைக்கலம் காத்தார், கால்நடை மருத்துவர்கள் முருகேசன், சிவபிரகாசம், துணைத்தலைவர் காந்திசரன், இளைஞர் பாசறை ராஜ விக்னேஸ்வரன் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## 3¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கலெக்டர் சுப்பையன் தகவல்



தஞ்சை மாவட்டத்தில் 3¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

முகாம்

தஞ்சை அருகே உள்ள தோழகிரிப்பட்டியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்றுகாலை நடந்தது. முகாமிற்கு தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி, முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சத்து 86 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு அந்த பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்த மாவட்டம் முழுவதும் 82 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும். முதல்- அமைச்சர் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பெண்ணுக்கு 4 வெள்ளாடுகளும், வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் கறவை பசுக்களும் வழங்கப்பட்டன.

### கோமாரி நோய்

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் ஒரு வகை வைரஸ் நச்சு கிருமியால் ஏற்படும் கொடிய நோயாகும். இந்த வகை நோய்க்கு தடுப்பூசி மட்டுமே சிறந்த மருந்தாகும். இளங்கன்றுகளுக்கு இந்த நோய் ஏற்பட்டால்

100 சதவீதம் இறந்துவிடும். எனவே இந்த நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசி போடுவதே சிறந்தது. தடுப்பூசி போடும் பணியானது பொதுமக்கள் ஒத்துழைப்புடன் நடந்தால் மட்டுமே 100 சதவீதம் கோமாரி நோயை முற்றிலும் ஒழிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார். முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் செல்வவிநாயகம், உதவி இயக்குநர்கள் நெடுஞ்செழியன், ரவீந்திரன், செரீப், சவுந்தரபாண்டியன், தோழகிரிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ராயப்பன், துணை தலைவி தனம்சேகர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>நீலகிரி மாவட்டத்தில் 21–ந்தேதி வரை நடக்கிறது கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

ஊட்டி கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மனோகரன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

கோமாரி நோய் நம் நாட்டில் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. பொதுவாக இந்த நோயினால் மாடுகள் மற்றும் எருமை இனங்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி அனைத்து கால்நடைகளுக்கும் 100 சதவீதம் போடப்பட்டதன் காரணமாக இந்நோயின் தாக்கம் இன்றி நீலகிரி மாவட்டம் கோமாரி நோய் இல்லாத மாவட்டமாக விளங்குகிறது. தற்பொழுது மாவட்ட கலெக்டரின் வழிகாட்டுதலின் படி, கடந்த 1–ந் தேதி முதல் வருகிற 21–ந் தேதி வரையும், விடுபட்ட கால் நடைகளுக்கு வருகிற 22–ந் தேதி முதல் 30–ந் தேதி வரையும், 7–வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணி நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 44 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் முன்னிலையில் ஊட்டி தாலுகா காந்தல் பகுதியில் தொடங்கப்பட்டது. இதில் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மனோகரன், நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்ட ஆவின் பொது மேலாளர் குப்பன், கால்நடை உதவி டாக்டர்

சுகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**<u>வேலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பசு தீவிண பண்ணை அமைக்கப்படுகிறது கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் தகவல்</u>**



தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் வேலூர் மாவட்டத்தில் நெமிலி அடுத்த கீழ் வீதி கிராமத்தில் பசு தீவிண பண்ணை அமைக்கப்படுகிறது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தை வேலூர் கலெக்கடர் நந்தகோபால், கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் ஆபிரகாம், அரக்கோணம் தாசில்தார் மோகன் ராணிப்பேட்டை உதவி கலெக்டர் பிரியதர்ஷனி ஆகியோர் இன்று பார்வையிட்டனர். பின்னர் கால்நடை துறை பராமரிப்பு துறை இயக்குனர் ஆபிரகாம் கூறியதாவது. தமிழக முதல்–அமைச்சர் ஒப்புதலுடன் சட்டசபையில் கால்நடை துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் பசு தீவிண பண்ணைகள் அமைக்கப்படும். என்று அறிவித்தார். இதனை தொடர்ந்து தமிர்நாட்டில் பசு தீவிண பண்ணைகள் அமைக்க வேலூர், விழுப்புரம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. வேலூர் மாவட்டத்தில் நெமிலி அடுத்த கீழ் வீதிகிராமம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இங்கு உள்ள மேய்க்கால் புறம்போக்கு 86 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட உள்ளது. மாவட்ட கலெக்டர் தலைமையில் இந்த பண்ணை அமைக்கப்படுகிறது. சர்வே வேலைகள் முடிந்தவுடன் 1 மாதத்திற்குள் இந்த

திட்டம் தொடங்கப்படும். இந்த ஆண்டில் உற்பத்தி தொடங்கப்படும் வேலூர் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு மானிய விலையில் பசு தீவிணம் வழங்கப்படும். இந்த பசு தீவிண பன்ணைக்கு மாவட்ட நிர்வாகமும். கால்நடை பராமரிப்பு துறையும் நீதி உதவி வழங்கும் இந்த திட்டத்தை தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் செயல் படும். தொடர்ந்து 5 ஆண்டுகள் இந்த பசு தீவிண பன்ணையை கால் நடை துறை பராமரிக்கும். அதன் பின் ஊராட்சி வசம ஒப்படைக்கப்படும். இதன் மூலம் ஊராட்சிக்கு அதிக வருமானம் பெருகும். இவ்வாறு கால்நடை பராமரிப்பு துறை இயக்குனர் ஆபிரகாம் கூறினார். அப்போது கால்நடை துறை இணை இயக்குனர். கமலநாதன், துணை இயக்குனர் மனோகரன், உதவி இயக்குனர் இளங்கோ, ஆவின் துணை மேலாளர் டோமினிக், கீழவீதி ஊராட்சி மன்ற தலைவர் சிவகாமிநாதன் ஆகியயோர் உடன் இருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## செப்.5 முதல் வைகை அணையிலிருந்து தண்ணீர் திறப்பு: முதல்வர் உத்தரவு



தமிழக முதல்வர் ஜெயலலிதா| கோப்புப் படம்.

தேனி மாவட்டம், பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்காக செப்.5 முதல் வைகை

அணையிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து 5.9.2014 முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை வட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி மற்றும் மதுரை வடக்கு வட்டங்களிலுள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்" என முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

## இலைகள் மூலம் நாற்று உற்பத்தி



நாற்று உற்பத்தியில் இலைகள் மூலம் செடி வளர்ப்பு எனும் புதிய நடைமுறையைக் கண்டுபிடித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி ராஜரத்தினம். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வெளிப்பாளையம் சாலை பகுதியைச் சேர்ந்தவர் ராஜரத்தினம். 4 ஏக்கரில் நர்சரி தோட்டம் அமைத்து நாற்று உற்பத்தியை மேற்கொண்டு வருகிறார். நாற்று உற்பத்தியில் இலைகள் மூலம் செடி வளர்ப்பு எனும் நடைமுறையைக் கண்டறிந்துள்ளார். இந்த தொழில்நுட்பம் குறித்து அவர் கூறியதாவது: “கடந்த 1998-ம் ஆண்டில்

இருந்து நாற்று உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறேன். பூ வகைகளில் மல்லி, முல்லை, ஜாதி ரோஜா, அரளி, காக்கடா ஆகியவையும், பழ நாற்றில் ஈடன் எலுமிச்சை (குளோன் நாற்று), மாதுளை, பப்பாளி ரகம் ஆகியவையும், மர வகைகளில் மலை வேம்பு, சந்தனம், செஞ்சந்தனம், பெருமரம் போன்றவற்றையும் உற்பத்தி செய்து வருகிறேன். நாற்று உற்பத்தியில் விதைகள் மூலம் நாற்று உற்பத்தி, கட்டிங் முறை, விண் பதியம், மண் பதியம், ஒட்டுக் கட்டுதல், மொட்டுக் கட்டுதல், பட்டிங், கிராஃபிங், திசு வளர்ப்பு போன்ற முறைகள்தான் இருந்து வருகிறது. இலைகள் மூலம் நாற்று உற்பத்தி என்பது புதிய முறையாகும். மண் நிரப்பிய பாலிதீன் பைகளை பனிக் கூடாரத்தினுள் அடுக்கி வைக்க வேண்டும். அதன் மீது தண்ணீர் விட்டு நன்றாக ஈரம் செய்ய வேண்டும். அடுத்து விருப்பமான செடிகளில் இருந்து இலைகளை பறிக்க வேண்டும். உதாரணத்துக்கு கொய்யா இலையை எடுத்துக் கொண்டால், அந்த இலையை பூஞ்சானைக் கொல்ல பயன்படும் திரவத்தினுள் போட்டு எடுக்க வேண்டும். அடுத்து வேர் தூண்டும் பவுடரை இலைக் காம்பில் மட்டும் தொட்டு, அந்த இலையை பாக்கெட் மண்ணில் நட வேண்டும். கூடாரத்தின் வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை சரியான அளவில் பராமரிக்க வேண்டும். முதல் 5 வாரத்தில் காம்பு பகுதியில் இருந்து வேர் வரும். பின்னர், வேர் முடிச்சில் இருந்து புதுச்செடி உருவாகிவிடும். இதையடுத்து, பாக்கெட்டில் இருந்து செடியை வெளியே எடுத்து நடலாம். இந்த முறையில், விவசாயிகள் அதிகம் பயிரிடும் கொய்யா, குண்டு மல்லி, திருச்சி மாவட்டத்தில் அதிகம் பயிரிடக் கூடிய இட்லி பூ, காக்கடா, வெற்றிலை ஆகிய பயிர்களை பயிரிட்டு வெற்றி அடைந்துள்ளேன். கட்டிங் மூலம் வராத தாவர வகைகளிலும் இந்த புதிய முறையின் மூலம் நாற்று உற்பத்தி செய்ய முயற்சித்து வருகிறேன். தற்போது, இந்த புதிய முறை மூலம் கண்டுபிடிக்கப்பட்ட நாற்றுகளை விவசாயிகளுக்கு சோதனை அடிப்படையில் இலவசமாகக் கொடுத்து வருகிறேன். விதை வளர்ப்பு முறையில் விளைச்சல் ஒரே மாதிரி இருக்காது. திசு வளர்ப்பு முறையில் ஒரு செடிக்கு ரூ. 12-க்கு குறையாமல் நாற்று உருவாக்க முடியாது.

இதற்கெல்லாம் மாற்றாக இருப்பதுதான் இலைகள் மூலம் செடிகள் உற்பத்தி முறையாகும்" என்கிறார் ராஜரத்தினம்.

**<u>சென்னையில் இயற்கை விளைபொருள் கண்காட்சி</u>**

சென்னையில் முதல் முறையாக இயற்கை விளை பொருள் கண்காட்சி நடைபெற உள்ளது. பெசன்ட் நகரில் உள்ள ஸ்பேஸ் அரங்கில் இம்மாதம் 7-ம் தேதி இக்கண்காட்சி நடைபெற உள்ளது. ஆரோக்கிய வாழ்க்கை முறை, வீணாகும் நீரை தோட்டங்களுக்கு சுழற்சி முறையில் பயன்படுத்துவது, குடிநீர் சுத்திகரிப்பு, சுற்றுப்புறம் மாசுபடுதலைத் தடுப்பது, மழை நீர் சேகரிப்பு, ஆடைகளில் இயற்கை சாயம் பயன்படுத்துவது உள்ளிட்ட பல இயற்கை சார்ந்த விஷயங்கள் இக்கண்காட்சியில் விளக்கப்படும். காலை 7 மணிக்குத் தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற உள்ளது. இயற்கை விளை பொருள்களில் தயாரிக்கப்படும் எளிய வகை உணவுகள் இக்கண்காட்சியில் இடம்பெறும். பெங்களூரில் 7 முறை வெற்றிகரமாக நடத்தப்பட்ட இக்கண்காட்சி இப்போது முதல் முறையாக சென்னையில் நடத்தப்பட உள்ளது. வணிக நோக்கமின்றி ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். உரமின்றி இயற்கை வேளாண் முறையில் தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களும் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்த உள்ளன.

**<u>தென்னை, பனை மரங்களில் ஏற உதவும் கருவி</u>**



தென்னை, பனை உள்ளிட்ட உயரமான மரங்களில் காய்களைப் பறிப்பது என்பது விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது. மரம் ஏறி காய் பறிப்பதற்கான தொழிலாளர்கள் சரியான நேரத்தில் கிடைக்காததே

இதற்குக் காரணம். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண தென்னை, பனை, பாக்கு உள்பட கிளையில்லாத அனைத்து உயரமான மரங்களிலும் ஏறுவதற்கான கருவி தற்போது சந்தைகளில் விலைக்குக் கிடைக்கிறது. கோவை மாவட்டம் நரசிம்மநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த டி.என். வெங்கட் (என்கிற) ரெங்கநாதன் வடிவமைத்த கருவி உயரமான மரங்களில் ஏறுவதை மிகவும் எளிதாக்கியுள்ளது. இந்தக் கருவியை வடிவமைத்த தனது அனுபவம் குறித்து வெங்கட் கூறியதாவது: 25 ஆண்டுகள் ஜவுளி ஆலையில் நான் தொழிலாளியாகப் பணியாற்றினேன். 1999-ம் ஆண்டு ஆலையை மூடி விட்டார்கள். அப்போதுதான் தென்னை மரம் ஏறும் கருவியை வடிவமைப்பதற்கான எண்ணம் என்னிடம் ஏற்பட்டது.தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் தேங்காயின் தேவை அதிகமாக இருக்கும். அப்போது தென்னந் தோப்புகளை வைத்திருப்பவர்கள் காய்களை வெட்டி விற்பனை செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். ஆனால் மரம் ஏறி காய் வெட்ட ஆள் கிடைக்காமல் பல விவசாயிகள் அல்லல்படுவதை நான் பார்த்திருக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கில் கருவியை வடிவமைக்கத் தொடங்கினேன். என் சித்தப்பா குருசாமி வைத்திருந்த பட்டறை என்ஜினீயரிங் கண்ணோ ட்டத்தோடு கருவியை வடிவமைப்பதற்கான பல விஷயங்களை எனக்கு கற்றுக் கொடுத்தது. 2005-ம் ஆண்டில் நான் உருவாக்கியதுதான் தென்னை மரம் ஏறும் கருவி. தென்னை மரத்துக்கு மட்டுமின்றி, பனை மரம் ஏறும் கருவி, பாக்கு மரம் ஏறும் கருவி ஆகியவற்றையும் உருவாக்கினேன். எனது கண்டுபிடிப்பு பற்றி அறிந்த புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான தேசிய நிறுவனம் (National Innovation Foundation), மதுரை சேவா மற்றும் நபார்டு போன்ற நிறுவனங்கள் எனது கருவியை பிரபலப்படுத்த பல உதவிகளை செய்தன. NIF நிறுவனத்தின் உதவியால் எனது கண்டுபிடிப்புக்கு நான் காப்புரிமை பெற்றேன். பாரம்பரிய அறிவைப் பயன்ப டுத்தி அரிய கண்டு பிடிப்புகளை நிகழ்த்துவோருக்காக மத்திய அரசின் தேசிய அறிவியல் தொழில்நுட்பத் துறை வழங்கும் தேசிய விருது 2012-ம் ஆண்டு எனக்கு வழங்கப்பட்டது. எனது கண்டுபிடிப்புக்காக மேலும் பல விருதுகள் கிடைத்துள்ளன. குஜராத்

மாநில அரசு எனது கண்டுபிடிப்பை பெரிதும் ஊக்கப்படுத்தியுள்ளது. அம்மாநிலத்தில் உள்ள விவசாயப் பல்கலைக்கழகம் என்னிடமிருந்து 150 கருவிகளை விலைக்கு வாங்கியது. தற்போது இந்தியாவின் பல மாநிலங்களில் நான் வடிவமைத்த கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இலங்கை, ஆஸ்திரேலியா, மாலத்தீவு, மொரீசியஸ் உள்பட உலகின் பல நாடுகளில் எனது கருவி பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தென்னை, பனை மற்றும் பாக்கு மரங்களில் ஏற தனித்தனி கருவிகளை வடிவமைத்த நான், ஒரே கருவியின் மூலம் கிளை கள் இல்லாத அனைத்து வகை உயரமான மரங்களிலும் ஏறு வதற்கான புதிய கருவியை தற்போது வடிவமைத்துள்ளேன். பெண்கள், சிறுவர்கள் என எல்லோரும் இந்தக் கருவியைப் பயன்படுத்தி பாதுகாப்பாக மரத்தின் உச்சிக்கு சென்று காய்களைப் பறிக்க முடியும். 60 அடி உயரமுள்ள மரத்தில் 5 நிமிட நேரத்துக்குள் ஏறி, இறங்கலாம்” என்றார் வெங்கட். எல்லா வகை உயரமான மரங்களிலும் ஏறுவதற்கு ஏற்ற புதிய கருவியை வெங்கட் விற்பனை செய்கிறார். மேலும் விவரங்களுக்கு 99442 84440 என்ற செல்போன் எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.